**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.186/2021**

2025ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 18ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நடராஜன் (அ.சா.5 ) | தொழில் | : | கூலி வேலை |
| த/பெ., | : | திரு.முத்துச்சாமி | வயது | : | 67 |
| க/பெ. | : | திரு. | | | |
| கிராமம் | : | காங்கேயம்பாளையம் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 18.09.2025 |
| மாவட்டம் | : | திருப்பூர் | | | |

1 முதல் 5 எதிரிகள் முன்னிலையாகியுள்ளார்கள்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் காங்கேயம்பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 பன்னீர்செல்வம் என்பவரை தெரியும். எனக்கும், பன்னீர்செல்வத்திற்கும் சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு கீழே விழுந்து காயம் ஏற்பட்டுவிட்டது. அது சம்பந்தமாக பன்னீர் செல்வம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 15.11.2017 அன்று மதியம் 2.30 மணிக்கு பெரிச்சிபாளையம் சுந்தரம் மளிகைக் கடை அருகே நானும், ரவி மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர் நடந்து வந்துகொண்டிருந்தோம் என்றும், அங்கு வந்த எதிரிகள் எங்களை வழிமறித்தார்கள் என்றும், எங்களை

அசிங்கமாகப் பேசி வெட்டிக்கொல்லுமாறு அன்பழகன் கூறினார் என்றும், ரவியை அன்பழகன் வெட்ட முயன்றபோது பன்னீர்செல்வம் தடுக்க முயன்றதில் அவருக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும், எதிரி சத்தியராஜ் பன்னீர்செல்வத்தை கல்லால் இடது தொடையில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், உலகநாதன் என்னை கத்தியால் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், ஜெகநாதன், மோகன்ராஜ் , விவேகானந்தன் ஆகியோர் இரும்புக் கம்பிகளால் எங்களை அடிக்க வந்தனர் என்றும், சத்தம்போட்டதில் எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.09.18 20:24:11 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.